பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆனி 09 திங்கட்கிழமை 23.06.2025 | அதிர்வு 323

## ஈரானில் தற்போது 37 இலங்கையர்கள்

### வெளிவிவகார அமைச்சு தகவல்

மத்திய கிழக்கில் இடம்பெற்று வரும் மோதல்களுக்கு மத்தியில் ஈரானில் தற்போது 37 இலங்கையர்கள் உள்ளனர் என்று வெளிவிவகார 04



## எரிபொருள் விலை எகிறும் ஆபத்து!

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையேயான யுத்தம் தீவிரமடைந்த நிலையில் பாரசீக வளைகுடாவையும் அரபிக் கடலையும் இணைக்கும் ஹோர்முஸ் நீரிணையை மூடுவதற்கு ஈரான் முடிவு செய்திருப்பதால் சர்வதேசத்தில் எரிபொருள் நெருக்கடி ஏற்படும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. 04

## யாழ்ப்பாணத்தில் நேற்று மாலையில் கடுங்காற்று, மழை



யாழ்ப்பாண நகரத்திலும் மற்றும் சுற்றுப்புறங்களிலும் நேற்று மாலை திடீரென கடும் காற்றுடன் மழை கொட்டியது.

கடும் காற்றினால் பல இடங்களில் மரக் கிளைகள் முறிந்து 04




# அணையா தீபம் செம்மணியில் இன்று ஏற்றல்!

### அனைவரையும் அணி திரள அழைப்பு

(எஸ்.நிதர்சன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் செம்மணியில் இன்று ஆரம்பமாகவுள்ள 'அணையா விளக்கு' போராட்டத்தில் கட்சி பேதங்களைக் கடந்து நீதிக்காக அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் செம்மணி மனித புதைகுழிக்கு நீதி கோரி தொடர் போராட்டமொன்று செம்மணியில் இன்று காலை ஆரம்பமாக உள்ளது. தொடர்ந்து இந்தப் போராட்டம் மூன்று தினங்கள் இரவு பகலாக நடைபெறவுள்ளது. 03

## பாதுகாப்பு வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களுக்கு அறிவுறுத்து

இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்கள் உள்ளூர் பாதுகாப்பு வழிமுறைகளைக் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

ஈரானால் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மத்திய மற்றும் வடக்கு இஸ்ரேலில் உள்ள நகர்ப்புறங்களைக் குறிவைத்து பல ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்தே இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார இதனைத் தெரிவித்துள்ளார். 04






வவுனியா மாநகர சபையின் மேயர் தெரிவு போல இன்று திருகோணமலை மாநகர சபை மேயர் தெரிவு நடைபெற இருப்பது முக்கிய விடயம்.

யாழ்ப்பாணத்தில் என்ன போக்கை சங்கு – சைக்கிள் தரப்புக்கள் பின்பற்றுகின்றனவோ அதுவே வன்னியிலும் பதிலாக இருக்கும் என தமிழரசு கட்சி கூறியிருந்த போதிலும், சர்ச்சைக்குரிய பிரதேசமான வவுனியாவில் மாநகர சபை நிர்வாகம் தமிழ் தரப்பை விட்டு வெளியில் போகக்கூடாது என் பதற்காக தமிழரசு கட்சி தனது நிலைப்பாட்டை மாற்றி, சங்கு – சைக்கிள் தரப்புக்கு ஆதரவு வழங்கியது.

வவுனியாவிலும் விட மோசமான நிலைமை கொண்ட திருகோணமலையில் அந்தக் கனவான் போக்கை கைக்கொள்ளும் நிலையில் சங்கு 03

# ‘அணையா விளக்கு’ போராட்டத்தில் அனைவரையும் பங்குபற்றுமாறு சிறிதரன் எம்.பியும் அழைக்கின்றார்



(ந.லோகதயாளன்)

செம்மணியில் இன்று முதல் முன்னெடுக்கப்படும் “அணையா விளக்கு“ போராட்டத்தில் அனைவரையும் பங்கு கொள்ள தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சி.சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில் –

செம்மணியில் இன்று முதல் முன்னெடுக்கும் அணையா விளக்குப் போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் கலந்து கொள்ள வேண்டும் என்கின்ற ஓர் உன்னதமான வேண்டுதலை தமிழ் மக்களிடம் முன் வைக்கின்றேன். குறிப்பாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய இனப்படுகொலையின் சாட்சியங்களாக இருக்கின்ற பல எலும்புக் கூடுகள் தென்படுகின்ற மனிதப் புதை குழிகளின் அடையாளமாக இறுதியாக கண்டு பிடிக்கப்பட்ட அரியாலை சிந்துபாத்தி இந்து மயானத்திலே தோண்டி எடுக்கப்பட்டுள்ள 19 வரையான எலும்புக் கூடுகள் அதற்கு பின்னதாக அங்கே இன்னும் பல எலும்புக் கூடுகள் இருக்கின்றன என ஆய்வாளர்கள், தடயவியல் நிபுணர்கள் கூறியிருக்கின்ற இந்த நேரத்தில் பல்வேறு இடங்களில் குறிப்பாக மன்டைதீவு, சிலாவத்தை, கொக்குளாய், கொக்குத்தொடுவாய், குமுழமுனைப் பகுதிகள் எனப் பல இடங்களில் நாங்கள் தோண்டுகின்ற இடம் எல்லாம் மனித எலும்புக் கூடுகளையும் மனித எச்சங்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

அரியாலை சிந்துபாத்தி இந்து மயானத்தில் எந்தவித ஆடைகளும் இன்றி அடித்து முறித்து கைக் குழந்தைகள் பெண்கள், தாய்மார்கள், இளைஞர்கள் என்ற அடிப்படையிலேயே எலும்புக் கூடுகளின் அம்சங்களும், வயதுகளும் குறிப்பிடப்படுகின்றன.

இவை யாழ்ப்பாணத்தில் கொத்துக் கொத்தாக கணாமல் ஆக்கப்பட்டவர்களினுடையவையாக இருக்கலாம் அல்லது 2008, 2009 இறுதி யுத்த காலப்பகுதியில் சரணடைந்தவர்களினுடையவையாக இருக்கலாம் என்ற சந்தேகங்கள் மக்களிடம் உண்டு. இவை தொடர்பிலான மிகப் பெரிய வெளிப்பாடே இந்த அணையா விளக்குப் போராட்டம். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் யாழிற்கு வரும் சமயம் அவருக்கு அகண்டபாதையை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இதனை அடையாளப்படுத்தி வெளிப்படுத்தும் வகையில் இந்த அணையா விளக்குப் போராட்டம் அமைந்திருக்கின்றது. எனவே அனைவரும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி பங்குகொள்ள வேண்டும். – என்றார்.




# ஈரானிலிருந்த 41 இலங்கையர்களில் 4 பேர் அங்கிருந்து வெளியேறினர்

மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களுக்கு மத்தியில், ஈரானிலிருந்த 41 இலங்கையர்களில் 4 பேர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தற்போது ஈரானில் 37 இலங்கையர்கள் இருக்கின்றனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈரானில் உள்ள இலங்கை தூதரகத்தின் 5 அதிகாரிகளும் அவர்களில் அடங்குகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு ஜப்பான் உதவி

இந்த ஆண்டில் ஜப்பானிய அதிகாரப்பூர்வ பாதுகாப்பு உதவி திட்டத்தின் கீழ், பாதுகாப்பு உதவி பெறும் 8 நாடுகளில் இலங்கையும் அடங்குவதாக ஜப்பானின் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடல்சார் கண்காணிப்பு மற்றும் அனர்த்த மீட்பு திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த உதவியில் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானங்களும் அடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையைத் தவிர, குறித்த பட்டியலில் தாய்லாந்து, டோங்கா, கிழக்கு திமோர், இந்தோனேசியா, மலேசியா, பப்புவா நியூ கினி மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் வளர்ந்து வரும் இராணுவ உறுதிப்பாடு காரணமாக இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பாதுகாப்பு பதற்றங்களுக்கு மத்தியில், பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதில் ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளை ஆதரிப்பதற்காக, ஜப்பான் 2023 ஆம் ஆண்டு ஏப்ரலில் இந்த உதவி



திட்டத்தை ஆரம்பித்தது.

ஜப்பானின் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் இந்த உதவி திட்டத்துக்காக, 56 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

இருப்பதாக தெரியவில்லை. நேற்று இரவு வரை குழப்பம் விளைவிக்கும் போக்கு சங்கு தரப்பில் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

தமிழரசுக் கட்சியைப் பிளந்து, பிரித்து மேயர் சங்கு தரப்பும், தமிழரசின் ஒரு சிலரும் தீவிரமாக இருந்தனர் என ஒரு செய்தி தெரிவித்தது.

ஏற்கனவே திருகோணமலை மாநகர சபையில் தமிழரசை ஆதரிக்க ஐக்கிய தேசியக் கட்சி முடிவெடுத்திருந்தது. அது தொடர்பான தீர்மானத்தை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தாம் வெளிநாடு போக முன்னர் கட்சியின் செயலாளர் தலத்தா அத்துக்கோறளைக்கு வழங்கியிருந்தார் எனத் தெரிகிறது. சங்கு தரப்பின் மூத்த தலைவர்களின் அழுத்தம் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான வஜ்ரா அபேவர்த்தன, கட்சியின் செயலாளர் தலத்தா அத்துக்கோறளையுடன் தொடர்பு கொண்டு, சங்கு கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிடும் நபருக்கு திருகோணமலை மாநகர சபையில் தங்கள் உறுப்பினரை வாக்களிக்கச் செய்யும்படி அழுத்தம் கொடுக்கின்றார் எனத் தெரிய வந்தது.

இப்போது சங்கு தரப்பில் இருக்கும் தலைவர்கள் கடந்த நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்ற போது தமது கூட்டமைப்பின் முடிவை மீறி, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்திருந்தார்கள், ஆகவே அதற்குப் பிரதியுபகாரமாக இப்போது திருகோணமலையில் அவர்கள் கூறும் வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்க வேண்டும் என்று தலதா அத்துக்கோறளைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது எனத் தெரிய வருகிறது.

எது, எப்படி என்றாலும் தமிழரசை உடைத்து அதிலிருந்து ஒருவரை மேயராக்க முயற்சி எடுக்கப்பட்டால், அவர் மேயர் ஆகியும் குறுகிய காலத்திற்குள்ளேயே கட்சியின் ஒழுங்கு நடவடிக்கையால் மாநகர உறுப்பினர் பதவியையும், அதன் மூலம் பெற்ற மேயர் பதவியையும் இழக்க வேண்டி வரும் என்பதை சங்குடன் கூட்டுச் சேர்ந்து தமிழரசுக்குச் சதி செய்ய முயலும் உறுப்பினர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

தமிழரசுக் கட்சியின் தலைமையின் தலையீட்டை அடுத்து திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை தவிசாளர் தெரிவில் ஏற்பட்ட நெருக்கடி தீர்க்கப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி தெரிவித்தது.

இதே சமயம் வன்னியிலும் சில பிரதேச சபை தலைவர்கள் தெரிவு இந்த வாரத்தில் சர்ச்சையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு இன்று வருகை தரும் நிலையில் செம்மணிப் புதைகுழி விவகாரம் பூதாகரமமெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

அந்தப் புதைகுழி தொடர்பில் நீதி நேர்மையான, ஒழுங்கான, விசாரணைகள் நடைபெற வேண்டும் என்றும், அதையே தாங்களும் வற்புறுத்தி நிற்கின்றார்கள் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளம் தலைவர் நாமல் ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

இது என்னடா சோழியன் குடுமி சும்மா ஆடுகின்றது என்று ஆச்சரியப்பட்டேன். ஆனால் விடயம் இல்லாமல் இல்லை. இது விவகாரத்தில் ஒரு பழமொழி நினைவுக்கு வந்தது. தனக்கு தனக்கு என்றால்தான் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம் என்பார்கள்.

செம்மணி புதைகுழியில் சமாதியானவர்கள் 1996-க்கும் 2000க்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ் குடா நாட்டை இராணுவம் மீளக் கைப்பற்றிய காலத்தில் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று கருத்து நிலவுகிறது. அந்த காலகட்டத்தில் நாட்டின் படை நிர்வாகம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுாங்க, அவரது மாமனார் அனுருத்த ரத்வத்தை போன்ற அரசியல் தலைவர்களின் வழிகாட்டலில் இருந்தது. அப்போது படைத் தரப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பு கூறும் நிலையில் ராஜபக்ஷக்கள் இருக்கவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவும் அச்சமயம் இராணுவத்திலிருந்து முற்கூட்டியே ஓய்வு பெற்று, அமெரிக்கா சென்று, அங்கு பெட்ரோல் நிரப்பும் நிலையம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தார். ஆகையினால் அச்சமயத்தில் எழும் இராணுவ அத்துமீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் ராஜபக்ஷக்களைத் தொடர்பு படுத்தாது என்பதால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்கவில்லை, நீதி நியாயமாக புடைக்கின்றது. அவ்வளவுதான்.

இதில் இன்னொரு விடயமும் உண்டு. ராஜபக்ஷக்களுக்கு முந்திய காலத்தில் இராணுவக் கொடூரங்கள் தாராளமாக அரங்கேறின என்று நிரூபிக்கப்பட்டால், அவர்களுடன் ஒப்பிடும்போது ராஜபக்ஷக்கள் தேவலை என்ற கருத்து மக்களிடையே வரும் என்ற நம்பிக்கையும் கூட இதில் பொதிந்திருக்குமோ, என்னவோ....?

## அணையா தீபம்...

இன்று காலை 10 மணிக்கு அணையாத தீபம் ஏற்றப்படும். அந்த தீபத்தை, தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தியின் உறவினர், மதத் தலைவர்கள் ஏற்றி வைப்பர். தொடர்ந்து மலர் வணக்கம் இடம்பெறும்.

இன்று மாலை நிகழ்வாக செம்மணி தொடர்பான கதை வாசிப்பு அங்கு இடம் பெறும். இரவு நிகழ்வாக ஆவணப்படம் திரையிடப்படும்.

செம்மணிச் சந்தையில் நின்று, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுரங்களுக்காக சர்வதேசத்திடம் நீதி கேட்டு சர்வதேசத்தை அழைக்கும் அணையா விளக்குப் போராட்டத்திற்கு அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

இப் போராட்டத்திற்கு பல்வேறு பொது அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் தமது முழு ஆதரவை வழங்கியுள்ளமையுடன் அனைவரையும் அதிக் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளனர்.




தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் நீதி கோருகின்ற இந்தப் போராட்டத்தில் அனைத்துத் தமிழ் மக்களும் பங்காளிகளாக இணைந்து கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஜே.வி.பி.யின் சம்பிரதாய அரசியலை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கோரிக்கை



"நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏமாற்றியிருக்கிறது. அதிகாரத்துக்காக கள்வர்கள் என விமர்சித்தவர்களுடனேயே கூட்டணியமைத்துள்ளது. இந்த அரசாங்கமும் பாரம்பரிய அரசியலிலேயே ஈடுபடுகிறது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தம்மை நம்பி வாக்களித்த மக்களை இந்த அரசாங்கம் ஏமாற்றியுள்ளது. 70 ஆண்டுகள் நாட்டுக்கு சாபம் எனக் கூறியவர்களுடன் இணைந்து இன்று இந்த அரசாங்கம் உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைத்திருக்கிறது.

அதிகாரத்துக்காக கள்வர்கள் என விமர்சித்தவர்களுடன் இந்த அரசாங்கம் கூட்டணியமைத்துள்ளது. புதிய அரசியல் கலாசாரத்தை எதிர்பார்த்த மக்களுக்கு அரசாங்கம் ஏமாற்றத்தையே வழங்கியிருக்கிறது.

அதிகாரத்தைப் பெறுவதற்காக பொய் கூறி மக்களை ஏமாற்றினர. ஆனால் இன்று அதிகாரம் கிடைக்கப் பெற்ற பின்னர் சம்பிரதாயபூர்வ அரசியலலேயே தேசிய மக்கள் சக்தியும் ஈடுபட்டுள்ளது.

கடந்த அரசாங்களின் ஊழல், மோசடிகள் தொடர்பில் ஜே.வி.பி.யினர் பாரிய பிரசாரங்களை முன்னெடுத்தனர். ஆனால் இன்று இந்த அரசாங்கத்தின் கீழ் உப்பு மோசடி, அரிசி மோசடி என்பன இடம்பெற்றுள்ளன.

கடந்த அரசாங்கங்களையே இந்த அராசங்கமும் பின்பற்றுகின்றது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மோசடிகளைக் கட்டுப்படுத்தி அத்தியாவசிய உணவு பொருள்களின் விலைகளைக் குறைப்பதாகக் கூறிய அரசாங்கம் இன்று முன்னர் காணப்பட்டதை விட உணவு பொருள்களின் விலைகளை பன் மடங்கு அதிகரித்திருக்கின்றது.

கெஹெலிய ரம்புக்வெல்லவை காண்பித்துஊடகபிரசாரங்களைமுன்னெடுத்து, ஏனைய பிரச்சினைகளை மறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதியையும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் உறங்கிக் கொண்டிருக்கிறது." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





**யாழ்ப்பாணத்தில்...**

விழுந்தன. மின்சாரமும் பல இடங்களில் துண்டிக்கப்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த கடும் காற்று கணிசமான சேதங்களை ஏற்படுத்திஉள்ளது. மக்கள்பெரும்சிரமங்களையும் பாதிப்புகளையும் எதிர்கொண்டனர்.

இதனிடையே நேற்றைய தினம் யாழ் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி ஒன்று இந்த கடும் காற்றினால் நடத்தப்பட முடியாமல் இடைநிறுத்தப்பட்டு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

---

**பாதுகாப்பு...**

இதேவேளை, இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சின் கூற்றுப்படி, நிலைமை தொடர்ந்து மோசமடையக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, இஸ்ரேலில் உள்ள அனைத்து இலங்கையர்களும் விழிப்புடன் இருக்கவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அதிகாரபூர்வ வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும் தூதுவர் அறிவுறுத்தியுள்ளார்.

---

**ஈரானில்...**

அமைச்சு தெரிவித்துள்ளது.

ஈரானில் 41 இலங்கையர்கள் இருந்தனர் என்றும், அவர்களில் 4 பேர் இதுவரை நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்றும் வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போது ஈரானில் 37 இலங்கையர்கள் உள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

---

**எரிபொருள்...**

ஈரானுக்கும் ஓமனுக்கும் இடையே உள்ள ஒரு கப்பல் வழித்தடம் இதுதான்.

சவுதி அரேபியா, ஈராக், குவைத், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஈரான் போன்ற பாரிய எண்ணெய் உற்பத்தியாளர்கள் இந்த வழியாகவே எண்ணெய் ஏற்றுமதி செய்கிறார்கள்.

அத்தோடு, உலகின் முக்கிய எரிவாயு ஏற்றுமதி நாடான கத்தார், முழுமையாக இந்த நீரிணையையே சார்ந்துள்ளது.

நாளொன்றுக்கு 17.8 முதல் 20.8 மில்லியன் பரல் மசகு எண்ணெய் மற்றும் அதனுடைய உற்பத்திகள் இந்த வழியாகவே கொண்டு செல்லப்படுகின்றன.

இந்தப் பாதை தடைப்பட்டால் உலக நாடுகள் எங்கும் எரிபொருள் பற்றாக் குறையும் விலை உயர்வும் தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

(மற்றொரு செய்தி 16 ஆம் பக்கத்தில்)



# வலி. வடக்கு காணிகளை விடுவிக்கக் கோரி இரண்டாம் நாளாகத் தொடர்ந்த போராட்டம்

யாழ். வலிகாமம் வடக்கில் உள்ள 2400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரிய தொடர் போராட்டம் மயிலிட்டி சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

30 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி இந்த அமைதிவழிப் போராட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.









# கொஹுவல துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் மாட்டினர்

கொஹுவல பொலிஸ் பிரிவின் களுபோவில விகாரை வீதியில் அமைந்துள்ள ஒரு வீட்டின் மீது கடந்த 15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கையானது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மல்வானை பகுதியைச் சேர்ந்த 33 மற்றும் 54 வயதுடைய பெண் சந்தேகநபர்கள் இருவரும், ரனால பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் சந்தேகநபர் ஒருவருமே செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணையைத் தொடங்கியது.

அதனடிப்படையில், இந்தத் துப்பாக்கிச் சூட்டின் முக்கிய சந்தேகநபருக்கு உதவிய இரண்டு பெண் சந்தேக நபர்கள் மற்றும் ஒரு ஆண் சந்தேகநபர் மல்வானை மற்றும் ரனால பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டு கொ/ஹுவல பொலிஸ் நிலையத்தில் ஆஜர்படுத் தப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் கொஹுவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் 47 வயதுடைய நபர் சிக்கினார்

ஜா – எல பொலிஸ் பிரிவின் கந்தானைப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி, வெடிமருந்துகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கையானது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஏகல பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட தானியங்கி கைத்துப்பாக்கி, மகசின்கள் மற்றும் 30 தோட்டாக்கள், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிப்பீட்டர் துப்பாக்கி மற்றும் அந்தத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 10 தோட்டாக்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாழடைந்த வீட்டில் இருந்து கேரள கஞ்சா மீட்பு!

ஜா – எல பொலிஸ் பிரிவின் நிவாசிபுர பகுதியில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சோதனை மேற்கொள்ளப்பட்டபோது, பாழடைந்த வீட்டில் இருந்து கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது, 5 உரை பைகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 129 கிலோகிராம் 245 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக கொழும்பு குற்றப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

# அரசியல்வாதிகளின் முகவரியாக மாறி வருகின்றது மகஸின் சிறை

## கிளிநொச்சி நிகழ்வில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு














ஊழல், மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளின் முகவரியாக மகஸின் சிறைச்சாலை மாறி வருகின்றது எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் உயர் திறமைகளை வெளிப்படுத்திய சிறந்த மாணவர்களைக் கௌரவிக்கும், ஜனாதிபதி நிதியத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கிளிநொச்சி நெலும் பியசவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

உயர்தரப் பரீட்சையில், ஒவ்வொரு பாடப்பிரிவிலும், ஒரு மாவட்டத்தில் சிறந்த பெபேறுகளைப் பெற்ற 60 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, இந்தத் திட்டத்தின் கீழ் நிதிப் புலமைப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் 287 மாணவர்களுக்குத் தலா ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீபவானந்தராஜா, க.இளங்குமரன், ம.ஜெகதீஸ்வரன், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட கடற்றொழில் அமைச்சர் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:–

“சாதாரண மக்களுக்கான ஜனாதிபதி நிதியத்தையும் பெரும் புள்ளிகளே கடந்த காலத்தில் பெற்றுள்ளனர். தற்போதுதான் அதனை சாதாரண மக்களுக்கு – தேவையுள்ள மக்களுக்கு உரிய வகையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த காலங்களில் ஊழல், மோசடிகளில், குற்றச்செயல்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொருவராக சிறைச்சாலைக்குச் செல்கின்றனர். எதிர்காலத்தில் இந்த நாட்டிலுள்ள பெருவாரியான அரசியல்வாதிகளின் முகவரியாக மகஸின் சிறைச்சாலை மாறக்கூடும். அவர்களின் மக்களின் பணத்தையே கொள்ளையடித்துள்ளனர்.

கடந்த காலங்களில் ஜனாதிபதிகள்கூட இரு சம்பளங்களை பெற்று வந்தனர். எம்.பிக்களாக இருந்ததற்குரிய சம்பளத்தையும் பெற்றனர். ஜனாதிபதிக்குரிய சம்பளத்தையும் பெற்றனர். ஆனால், எமது ஜனாதிபதி அவ்வாறு செயற்படுவதில்லை. ஜனாதிபதி மாளிகைகளைக்கூட நிராகரித்துள்ளார். எமது அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களும் அப்படித்தான். எந்தவொரு சலுகைகளையும் பெறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சம்பளத்தை மட்டுமே பெறுகின்றோம்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உலகப் போர் மூளும்?

ஈரான் மீது அதிரடியாக இஸ்ரேல் தொடுத்த போரில் இப்போது அமெரிக்காவும் நேரடியாகக் களம் இறங்கி விட்டது.

ஈரானின் மூன்று அணு ஆய்வு மையங்கள் மீது அமெரிக்க விமானங்கள் மிக மோசமான சேதங்களை ஏற்படுத்தக் கூடிய நாசக் குண்டுகளை வீசியிருக்கின்றன.

இந்த தாக்குதலில் அந்த அணு ஆய்வு மையங்கள் முற்றிலுமாக அழிந்து போயின என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கூறியிருக்கிறார். ஆனால் சேதம் மிகக் குறைந்த அளவில் மட்டுமே இருந்ததாக ஈரான் மறுத்துள்ளது.

இந்தப் போரில் அமெரிக்கா நேரடியாக தலையிட்டமை இவ்விவகாரம் மூன்றாவது உலகப்போராக வெடிக்கக் கூடிய ஆபத்து நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

ஈரான் அணு ஆயுத வல்லாதிக்கத்தை பெறுவதை தடுப்பதற்காகவே இந்த தாக்குதல் நடவடிக்கை என்று அமெரிக்காவும் அதன் செல்லப் பிள்ளையான இஸ்ரேலும் வியாக்கியானம் கூறுகின்றன.

ஆனால் ஈரான் அணு ஆயுத வல்லமையை பெறாமல் தடுப்பதற்கான தாக்குதல் என்ற பெயரில் அமெரிக்கா நேற்று அதிகாலை தொடுத்த நடவடிக்கையே ஈரானுக்கு அணு ஆயுத வசதியை ஏற்படுத்திக் கொடுத்து விடுமோ என்ற சந்தேகத்தை இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது.

ஈரானின் பாதுகாப்புக்காக ஈரானுக்கு அணு ஆயுதங்களை கொடுப்பதற்கு இப்போது பல நாடுகள் முன் வந்திருக்கின்றன என ரஷ்யா கூறுகின்றது.

அமெரிக்காவின் எதிர்த்தரப்பில் இருக்கின்ற ரஷ்யா, சீனா, வட கொரியா போன்றவை ஏற்கனவே அணு ஆயுத வல்லாதிக்கம் கொண்டவை. அவை அமெரிக்காவின் தாக்குதலினால் பாதிப்படைந்த ஈரானுக்கு அணு ஆயுதங்களை வழங்க முன் வந்திருக்கின்றன எனச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

ஈரானுக்கு பல நாடுகள் அணு ஆயுதங்களை வழங்கத் தயாராக இருக்கின்றன என்ற செய்தியை ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதியும் ரஷ்ய பாதுகாப்பு கவுன்ஸிலின் துணைத் தலைவருமான டிமிட்ரி மெட்வெடேவ் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருக்கிறார்.

இது விடயத்தில் ஈரானின் அழைப்புக்காக காத்திருப்பதாக வட கொரியா தெரிவித்து இருக்கின்றது.

சீனாவும் ஈரானுக்கு இந்த நெருக்கடி சமயத்தில் மிக நெருக்கமாக உதவுவதற்கு தயாராக இருப்பதாக சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கத் தாக்குதலின் பின்புலத்தில் ரஷ்ய அதிபர் புடினுடன் நேரடியாகக் கலந்தாலோசனை செய்வதற்காக ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் செய்யத் அப்பாஸ் அரக்சி, இன்று அவசர அவசரமாக மொஸ்கோ செல்கின்றார்.

சர்வதேச ரீதியில் அமெரிக்காவுக்கு எதிரான சக்திகள் இந்தப் போரில் ஈரான் பக்கம் வலுவான ஆதரவு நிலையை எடுத்தால், அந்தப் பின்புலத்தோடு ஈரான் அமெரிக்காவுக்கு எதிரான தனது கைவரிசையை காட்டத் தொடங்கும் என்று ஊகிக்கப்படுகிறது. அத்தகைய நிலை ஏற்பட்டால் அது மூன்றாம் உலகப் போராக விரிவடையும் என அவதானிகள் கூறுகின்றனர்.

ஏற்கனவே ஈரானுக்கு நெருக்கமான பல மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்கப் படைத்தளங்கள் பல உள்ளன. அவற்றை ஈரான் இலக்கு வைப்பது அதன் இப்போதைய இயலுமையில் சாதகமான விடயம். அதே சமயம் ஈரானை நெருங்கி பல யுத்த கப்பல்களை அமெரிக்காவும் நகர்த்தி இருக்கின்றது.

நேற்று அமெரிக்கா ஈரான் மீது நடத்திய தாக்குதலுக்கு நட்பு சக்திகளோடு சேர்ந்து ஈரான் பதிலடி கொடுக்க முற்பட்டால் உலகப் போர் வெடிப்பதும், அதனால் உலக நாடுகள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளப் போவதும் தவிர்க்க முடியாத சிக்கல்களாக இருக்கப் போகின்றன.

# மோசடியான முறையில் கொழும்பு மாநகரத்தை கைப்பற்றிய என்.பி.பி.

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு




"கொழும்பு மாநகர சபையில் திறந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருப்போம். அரசின் டீல் அரசியல் மற்றும் அரசுக்குப் பக்கச்சார்பாக நடந்துகொண்ட மேல் மாகாண ஆணையாளரால் மோசடியான முறையில் தேசிய மக்கள் சக்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கொழும்பு மாநகர சபையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டாலும் நாம் 54 வாக்குகளைப் பெற்றுக் கொண்டோம். திறந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருப்போம்.

அரசின் டீல் அரசியல் மற்றும் அரசுக்குப் பக்கச்சார்பாக நடந்து கொண்ட மேல் மாகாண ஆணையாளரால் மோசடியான முறையில் தேசிய மக்கள் சக்தி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இதற்கு முன்னர் இரகசிய வாக்கெடுப்புக்களை முற்றாக நிராகரித்த ஜே.வி.பி. இன்று மோசடிக்காக அதனை ஊக்குவிக்கின்றது. அதிகாரத்துக்காக தமது கொள்கைகளையே இவர்கள் காட்டிக் கொடுத்துள்ளனர்.

மேல் மாகாண ஆணையாளரின் அரசியல் பக்கச்சார்பு மற்றும் சர்வாதிகார செயற்பாடுகள் தொடர்பில் எமது சட்ட ஆலோசனைக் குழு விசேட அவதானம் செலுத்தியிருக்கின்றது.

அவர் முற்றுமுழுதாக உள்ளூராட்சி சபை சட்டத்துக்கு முரணாகவே செயற்பட்டிருக்கின்றார். அத்தோடு பொது நிர்வாக அமைச்சால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களையும் அவர் பின்பற்றவில்லை.

தன்னிச்சையாகவே அவரால் முடிவுகள் எடுக்கப்பட்டன. எனவே, அவருக்கு எதிராக நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுப்போம். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

காலியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், நுவரெலியாவில் தொண்டமானும், அநுராதபுரம் மற்றும் குருணாகலில் ரிஷாத் பதியுதீனுடைய கட்சி உறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவளித்துள்ளனர்.

அது மாத்திரமின்றி மட்டக்களப்பில் பிள்ளையானுடைய ஆதரவைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளையும் அரசு முன்னெடுத்துள்ளது.

அரசு இன்று மக்களை மறந்து, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மாத்திரம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது." – என்றார்.

# 12 ஆயிரம் கஞ்சா செடிகள் சூரியவெவவில் கைப்பற்றல்

## சந்தேகநபர் ஒருவர் கைது

சூரியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஒரு ஏக்கர் நிலப் பரப்பளவில் பயிரிடப்பட்ட 12 ஆயிரம் கஞ்சா செடிகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர் கும்புக்வெவ பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் சூரியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# களனியில் கழிவுத் தேயிலை! லொறியுடன் ஒருவர் கைது!!

களனி பொலிஸ் பிரிவின் களனி பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 3 ஆயிரத்து 681 கிலோகிராம் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற கழிவுத் தேயிலை மற்றும் ஒரு லொறியுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர் ஹங்வெல்ல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.











# வைத்தியர் சயந்தன் எழுதிய 3 நூல்கள் யாழில் வெளியீடு

குழந்தை சத்திர சிகிச்சை நிபுணரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்தியர் பா.சயந்தன் எழுதிய குழந்தை சத்திர சிகிச்சை தொடர்பான மூன்று நூல்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கென யாழ் நகரில் அமைக்கப்பட்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதி கட்டடத்தில் நேற்று சனிக்கிழமை இந்த்ச் நிகழ்வு நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி வைத்தியர் இ.சுரேந்திரகுமாரன், சத்திர சிகிச்சை நிபுணர் வைத்தியர் எஸ்.ரவிராஜ், குழந்தை சத்திர சிகிச்சை நிபுணர்களான வைத்தியர் சஞ்சய அபேயகுணசேகர மற்றும் பி.சஜீவன், மதத் தலைவர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், மருத்துவ பீட மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

















# கதிர்காமத்திற்கான கானகப் பாதையில் முதல் நாளே 10 ஆயிரம் பக்தர்கள் பயணம்

(உகந்தையிலிருந்து வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டதும் முதல் நாளில் 10 ஆயிரத்து 450 அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்தனர்.

இது வரலாற்றில் முதல் நாளில் சென்ற அதிகூடிய அடியார்களின் எண்ணிக்கையாகும்.

கடந்த காலங்களில் பொதுவாக சுமார் நான்காயிரம் அடியார்கள் முதல் நாளில் பிரவேசிப்பதுண்டு.

கடந்த வருடம் மட்டும் அது ஐயாயிரத்தைத் தாண்டியது.

ஆனால் இவ்வருடம் அது வரலாற்று பதிவாக பத்தாயிரத்தை தாண்டியதாக மாறியுள்ளது.

அதுமட்டுமின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை 2 ஆம் நாள் 5,456 அடியார்கள் காட்டுக்குள் பிரவேசித்தனர். இதுவும் இரண்டாம் நாள் சாதனையாக பார்க்கப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சுமார் 4,000 பேரளவில் செல்லும்வதற்காக உகந்தமலை முருகன் ஆலயத்தில் தங்கி இருந்தனர் என ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க (சுதர்) தெரிவித்தார்.

இம்முறை சுமார் 50 ஆயிரம் பேர் வரை பயணிக்கலாம் என் எதிர்பார்க்கப்படுகிறது.










# துங்ஹிந்த பஸ் விபத்து; விசாரணை ஆரம்பம்

பதுளை துங்ஹிந்த பஸ் விபத்து தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பதுளை போக்குவரத்து பிரிவின் பணிப்பாளரின் தலைமையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை துங்ஹிந்த பகுதியில் பஸ் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் 31 பேர் காயமடைந்தனர்.

விபத்துடன் தொடர்புடைய 43 வயதான பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சாரதி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

தம்புத்தேகம பகுதியிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்த சுற்றுலா பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியது.

பாதுகாப்பற்ற வகையில் சாரதி பஸ்ஸை செலுத்தியமையே விபத்திற்கு காரணமென பொலிஸார் தெரிவித்தனர்.



# இஸ்ரேலிலுள்ள 5 தொழிலாளர்கள் இலங்கை திரும்புவதற்கு கோரிக்கை

இஸ்ரேலில் பணிபுரியும் 5 இலங்கைத் தொழிலாளர்கள் நாடு திரும்புவதற்கு கோரிக்கை விடுத்துள்ளனர் என இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் ஐவர் நாட்டிற்கு வந்துள்ளனர் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு மீண்டும் பணியாளர்களை அனுப்புவது இடை நிறுத்தப்பட்டுள்ளதால் இஸ்ரேலுக்கு செல்லவிருந்த 119 பணியாளர்கள் நாட்டில் உள்ளனர்.

மீண்டும் சர்வதேச விமான போக்குவரத்து வழமைக்கு திரும்பியதன் பின்னர் உடனடியாக அவர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் தெரிவித்துள்ளார்.



# நாடாளுமன்ற பணியாளர்களின் உணவு கட்டணம் குறைகிறது

எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில், நாடாளுமன்ற பணியாளர்களுக்கான உணவுக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற பணியாளர்களின் கோரிக்கைக்கு அமைய நாடாளுமன்ற குழு, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கடந்த 20 ஆம் திகதி கூடிய போது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, உணவு கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றுதர அதிகாரி ஒருவரிடம் இருந்து அறவிடப்படவிருந்த 4,000 ரூபா உணவுக்கட்டணம் தற்போது 3,000 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

நிர்வாக தரமற்ற பணியாளர்களுக்கு அறவிடப்படவிருந்த 2,500 ரூபாய் உணவுக்கட்டணம் 2,000 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நாடாளுமன்ற பொது உணவகத்தில் உணவுகளை கொள்வனவு செய்யும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சாரதிகள், காவல்துறையினர், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு தற்போது அறவிடப்படும் உணவுக் கட்டணத்தில் மாற்றம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, நுவரெலியாவில்உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் விடுமுறை இல்லத்தின் ஒரு பகுதியை நாடாளுமன்ற ஊழியர்களுக்காக ஒதுக்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.







# மதுரையில் களைகட்டிய முருக பக்தர்கள் மாநாடு

## பவன் கல்யாணுக்கு உற்சாக வரவேற்பு

மதுரையில் நேற்று நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாட்டில் ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் பங்கேற்றார். காலை முதலே மாநாடு நடைபெறும் திடலுக்கு பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பக்தர்கள் வேல்களை ஏந்தியும், காவடி எடுத்தும் வருகை சென்றுள்ளனர்.

மதுரை ரிங்ரோடு அருகே சுமார் 20 ஏக்கர் பரப்பில் முருக பக்தர்கள் மாநாடு நடைபெற்றது. மாலை 3 மணிக்கு தொடங்கும் மாநாட்டில் பங்கேற்க, வெளியூர் பக்தர்கள் அதிகாலை முதலே மாநாட்டு திடல் பகுதியில் திரண்டனர். அவர்கள் மாநாட்டு வளாகத்தில் வைக்கப்பட்டு இருந்த முருகனின் அறுபடை வீடுகளின் மாதிரிகளை தரிசித்தனர்

மாநாட்டு பகுதிக்கு வரிசையில் செல்வதற்கு தடுப்புகளை ஏற்படுத்தி வழித்தடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்வழியே செல்வோர் அனைவரையும் பொலிஸார், தீவிர சோதனைக்கு பிறகே அனுமதித்தனர்.

இந்நிலையில், இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் நேற்று காலை மதுரை விமான நிலையம் சென்றடைந்தார். அவரை, பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மலர்கொத்து கொடுத்து, பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.

மேலும், மாநாட்டில் பங்கேற்க வருகை தரும் முக்கிய பிரமுகர்களை வரவேற்க மதுரை விமான நிலையத்தில் தமிழக பா.ஜ.க. சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



# தமிழகத்தில் ஆன்மிக புரட்சி ஏற்பட முருக பக்தர்கள் மாநாடு உதவும்

## இந்து முன்னணி மாநிலத் தலைவர் தெரிவிப்பு




தமிழகத்தில் ஆன்மிக புரட்சி ஏற்பட இம்மாநாடு உதவிகரமாக இருக்கும் என்று முருக பக்தர்கள் மாநாட்டில் இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் பேசினார்.

தமிழக இந்து முன்னணி சார்பில், மதுரை பாண்டிகோவில் அம்மா திடலில் முருக பக்தர்கள் மாநாடு நேற்று நடைபெற்றது. இதன்போது ஆன்மிக கலை நிகழ்ச்சிகள் நடந்தன. மாநாட்டில் இந்து முன்னணியின் மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் உரையாற்றுகையில்,

“மதுரை முருக பக்தர்கள் மாநாடு நடக்கக்கூடாது என்று ஒரு கோஷ்டி இருக்கிறது. அறநிலையத்துறை அமைச்சர் விரதம் இருக்கிறார் என்ற தகவலும் வந்தது. அவர் விரதம் இருப்பது மூலமாவது அவருக்கு நம்பிக்கை இருக்கிறது. இம்மாநாடுக்கு விளம்பரம் செய்வது பற்றி யோசித்துபோது, வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன், வைகோ, அமைச்சர் சேகர்பாபு ஆகியோர் மாநாடு பற்றி பேசி அதிக விளம்பரம் தேடி கொடுத்தனர்.

இந்த மாநாட்டுக்கு எதற்குகாக ஆந்திராவில் இருந்து துணை முதல்வர் வரவேண்டும் என அமைச்சர் சேகர்பாபு கேட்கிறார். அவர் 400 கோடி ரூபா செலவில் மாநாடு நடத்த போகிறோம் என கூறுகிறார். இப்பணம் எங்கிருந்து வந்தது என சொல்லவேண்டும். அவரது அப்பா அல்லது தமிழக முதல்வர், அறநிலைய கோயில் பணத்தில் இருந்து செலவிடப்படுகிறதா என, கணக்கு கொடுக்க வேண்டும். நாங்கள் இம்மாநாட்டுக்குரிய செலவு கணக்குகளை கொடுக்க தயாராக இருக்கிறோம். நீங்களும் வெளியிட தயாராக இருக்க வேண்டும்.

தமிழகத்தில் ஆன்மிகம் வளர்ந்துள்ளது. இந்த மாநாட்டில் அரசியல் பேசக்கூடாது என்றனர். அனைத்து கட்சிகளுக்கும் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்தோம்.எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு நேரில் அழைப்பு கொடுத்தோம். அவரும் வாழ்த்து தெரிவித்துள்ளார். அவரது பிரதிநிதிகளாக முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே. ராஜு, ஆர்பி உதயக்குமார் வந்துள்ளனர். அவர்களை வரவேற்கிறோம்.

தமிழக முதல்வரை அழைப்பீர்களா என, பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கேட்டனர். முதல்வருக்கும் கடிதம் எழுதினோம். நேரில் சந்தித்து மாநாட்டு அழைப்பிதழ் வழங்க நேரம் கேட்டபோது, அதற்கு இதுவரையில் அவர் பதிலளிக்கவில்லை. ஒருவேளை அவர் நேரில் வந்து இருந்தால் மாநாட்டு மேடையில் பேச ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். இந்துகளுக்கு ஆதரவாக பெருமை பேசும் மாநாடு இது. சனாதனத்தை பேசினால் சந்நியாசிகள் ஒன்றாக வேண்டும். அவர்களுக்கு பின்னால் இந்து முன்னணி இருக்கும். தமிழகத்தில் ஆன்மீக புரட்சி ஏற்பட இம்மாநாடு உதவிகரமாக இருக்கும்.” என்றார்.



# தி.மு.க. கூட்டணி உடையுமென அ.தி.மு.க - பா.ஜ.க. பகல் கனவு

## செல்வப்பெருந்தகை கூறுகிறார்

தி.மு.க. கூட்டணி உடையும் என அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் பகல் கனவு காண்கின்றன என்று காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“இண்டியா கூட்டணி வலிமையாக இருக்கிறது. மத்திய இணை அமைச்சர் எல்.முருகனும், பா.ஜ.கவினரும் கூறுவது போன்று கூட்டணியில் எந்தவித மான ஓட்டையும் இல்லை. நெல்லிக்காய் மூட்டை தான் சிதறும். சிதறுவதற்கு இது நெல்லிக்காய் மூட்டை கிடையாது. இது எஃகு கோட்டை கூட்டணி. இது சிதறுவதற்கு வாய்ப்பு இல்லை.

சிறு சிறு பிரச்சினைகள் இருந்தால் நாங்கள் பேசி தீர்த்துக் கொள்வோம். தி.மு.க. கூட்டணி உடையும் என அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் பகல் கனவு காண்கின்றன. தமிழக மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். தமிழகத்தில் யாரெல்லாம் பாசிச சக்தியோடு இணைந்து இருக்கிறார்களோ அவர்களை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்கள். தமிழ் கடவுள் முருகன் புறக்கணிப்பார்.

அயோத்தியில் ராமர், பா.ஜ.கவை கைவிட்டு விட்டார். மக்களை நம்பி பா.ஜ.க. கிடையாது. மதத்தை வைத்து அரசியல் செய்கிறது பா.ஜ.க. இதுவரை மணிப்பூருக்கு பிரதமர் போகவில்லை. மணிப்பூருக்கு செல்லாமல் இங்கே முருகன் மாநாடு என்றால் முருகன் மன்னித்து விடுவாரா? தமிழகத்துக்கு வரவேண்டிய கல்வி நிதி தராமல் மறுக்கிறது. தமிழ் கடவுள் முருகனை ஏமாற்றி வேஷம் போட முடியுமா? பா.ஜ.க. வேஷம் சில மக்களை ஏமாற்றலாம். முருகனை ஏமாற்ற முடியாது.” என்று தெரிவித்துள்ளார்.



# ஈரான் மீதான தாக்குதலின் மூலம் விதிகளை மீறியுள்ள அமெரிக்கா

## சீனா குற்றச்சாட்டு

ஈரான் மீதான தாக்குதலின் மூலம் சர்வதேச விதிகளை அமெரிக்கா மீறியுள்ளதாக சீனா குற்றம் சாட்டியுள்ளது.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியதற்கு கண்டனத்திற்குரியது என்றும், இரு தரப்பினரும் உடனடியாக பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் எனவும் சீனா குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

“ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் கண்டனத்திற்குரியது. இதன்மூலம் ஐக்கிய நாடுகள் அவையின் கொள்கைகள் மற்றும் நோக்கங்களை அமெரிக்கா அவமதித்துள்ளது. போர் தொடர்பான சர்வதேச விதிகளையும் மீறியுள்ளது.

போர் தொடர்பாக இரு தரப்பினரும், குறிப்பாக இஸ்ரேல் தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தி உடனடி தீர்வு காண வேண்டும். இஸ்ரேல் – ஈரான் நாடுகளில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றத்தைத் தணிக்கவும், நிலைத்தன்மையை ஏற்படுத்தவும் சர்வதேச நாடுகளுடன் இணைந்து சீனா செயல்படும். இதுவே சீனாவின் நிலைப்பாடு.” எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீதான அமெரிக்காவின் தாக்குதல் பொறுப்பற்றது என ரஷ்யா கண்டித்துள்ளது.

இதுதொடர்பில் ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“எந்த வாதங்கள் பயன்படுத்தப்பட்டாலும், ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் பிரதேசத்தை ஏவுகணை மற்றும் வெடிகுண்டுகள் மூலம் தாக்குவது பொறுப்பற்ற முடிவு. சர்வதேச சட்டம், ஐ.நா. சாசனம் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்களை கடுமையாக மீறும் செயல் இது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக உள்ள ஒரு நாடு, இத்தகைய செயலில் ஈடுபட்டிருப்பது ஆபத்தானது.” என்று குறிப்பிட்டுள்ளது.

ஈரான் மீதான அமெரிக்க தாக்குதல்களுக்கு பாகிஸ்தானும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்த தாக்குதல் அனைத்து சர்வதேச சட்டங்களுக்கும் எதிரானது என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

தாக்குதலில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள ஈரானுக்கு முழு அதிகாரமும் உள்ளதாக பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

# ஹோர்முஸ் நீரிணையை மூடுவதற்கு ஈரானிய நாடாளுமன்றம் அனுமதி



ஹோர்முஸ் நீரிணையை மூடுவதற்கு ஈரானிய நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் இறுதி முடிவு உயர் தேசிய பாதுகாப்பு பேரவையினால் எடுக்கப்படும் என ஈரானிய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

கச்சா எண்ணெய் போக்குவரத்திற்கான முக்கிய வழித்தடமாக குறித்த நீரிணை காணப்படுகிறது.

உலக கச்சா எண்ணெய் போக்குவரத்தில் குறித்த பகுதியும் முக்கியம் பெறுவதால், எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் இதனூடாக விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



# ஈரான் தொடர் தாக்குதல்; வெறிச்சோடிய இஸ்ரேல்

ஈரான் இராணுவத்தின் ஏவுகணை தாக்குதல் தீவிரமடைந்து வருவதால் டெல் அவிவ் உள்ளிட்ட இஸ்ரேலின் பெரும்பாலான நகரங்கள் வெறிச்சோடி காணப்படுகின்றன.

இஸ்ரேலின் டெல் அவிவ், ஹைபா, டான் உள்ளிட்ட நகரங்களை குறி வைத்து ஈரான் ராணுவம் ஏவுக ணைகள், ட்ரோன்கள் மூலம் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. கடந்த சில நாள்களாக இஸ்ரேல் நகரங்களை குறிவைத்து பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் கொத்து குண்டுகளையும் ஈரான் இராணுவம் வீசி வருகிறது.

கிளஸ்டர் குண்டு எனப்படும் ஒரு கொத்து குண்டில் சுமார் 2,000 இற்கும் மேற்பட்ட குண்டுகள் இருக்கும். இவை சுமார் 8 கிலோ மீற்றர் சுற்றளவு வரை வெடித்துச் சிதறி பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடியவை. சில குண்டுகள் பூமியில் புதைந்துவிடும். அவை சில மாதங்கள், சில ஆண்டுகள் கழித்து கூட வெடித்துச் சிதறும். கொத்து குண் டில் விஷ வாயுக்களை நிரப்பினால் மிக மோசமான விளைவுகள் ஏற் படும். இதனால் இஸ்ரேல் மக்கள் அச்ச மடைந்து உள்ளனர்.

ஈரான் ஏவுகணைகள், ட்ரோன்கள் இஸ்ரேல் எல்லைக்குள் நுழையும்போது அபாய எச்சரிக்கை ஒலி எழுப்பப்படு கிறது. மேலும் சம்பந்தப்பட்ட நகரங் களை சேர்ந்த இஸ்ரேல் மக்களின் செல்போன்களுக்கு அபாய எச்சரிக்கை தகவலும் அனுப்பப்படுகிறது. அபாய ஒலி, எச்சரிக்கை தகவலை பார்த்தவுடன் இஸ்ரேல் மக்கள் வீடுகள், பொது இடங்களில் உள்ள பதுங்கு அறைகளில் தஞ்சமடைந்து விடுகின்றனர். இதனால் இஸ்ரேலில் உயிரிழப்பு மிகவும் குறை வாக உள்ளது. இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர். 250 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ள னர்.

ஈரான் இராணுவத்தின் ஏவுகணை தாக்குதல் தீவிரமடைந்து வருவ தால் டெல் அவிவ் உள்ளிட்ட பெரும் பாலான நகரங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. கடந்த ஒரு வார வாக இஸ்ரேல் முழுவதும் பாட சாலை, கல்லூரிகள், அலுவலகங்கள் செயல்படவில்லை. இஸ்ரேல், ஈரான் இடையே நேற்று 9 ஆவது நாளாக போர் நீடித்தது வரும் நிலையில், இஸ்ரேல் நகர மக்களிடம் தொடர்ந்து அச்சம் அதிகரித்து வருகிறது.

இஸ்ரேல் இராணுவம் சார்பில் 'அயர்ன் டோம்' என்ற வான் பாதுகாப்பு கவசம் நிறுவப்பட்டு உள்ளது. சுமார் 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள எதிரிகளின் ஏவுகணைகள், போர் விமா னங்கள், ட்ரோன்களை, 'அயர்ன் டோம்' ஏவுகணைகள் நடுவானில் இடை மறித்து அழித்துவிடும். அயர்ன் டோமின் செயல்திறன் 90 சதவீதம் துல்லிய மானது என்று இஸ்ரேல் இராணுவம் கூறிவந்தது. ஆனால் அதன் செயல் திறன் 60 முதல் 65 சதவீதம் அளவுக்கு மட்டுமே இருப்பதாக சர்வதேச பாது காப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ள னர்.

கடந்த 10 நாள்களில் ஈரான் இராணு வம், இஸ்ரேல் நகரங்களை குறி வைத்து சுமார் 500 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசியிருக்கிறது. இதில் 60 சதவீத ஏவுகணைகளை மட்டுமே 'அயர்ன் டோம்' இடைமற- ித்து அழித்திருக்கிறது. 40 சதவீத ஏவுகணைகள் இஸ்ரேல் நகரங்கள் மீது விழுந்துள்ளன. இதன் காரண மாகவே இஸ்ரேல் நகரங்களில் பெரிய அளவில் சேதங்கள் ஏற்பட்டிருக்கி றது.

முன்னதாக, ஈரானின் இஸ்பஹான் அணு சக்தி தளம் மீது இஸ்ரேல் விமா னப் படை நேற்று முன்தினம் மீண்டும் தாக்குதல் நடத்தியது. இஸ்ரேல் போர் விமானங்களின் தாக்குதலில் ஈரானின் 3 இராணுவ தளபதிகள் உயிரிழந்த னர்.

இதனிடையே, ஈரானில் உள்ள மூன்று முதன்மை அணுசக்தி நிலை யங்கள் மீது அமெரிக்கா வெற்றிகர மான தாக்குதலை நடத்தி முடித்துள் ளது என்று அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட அறி விப்பும் ஈரானின் பதிலடி தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -23.06.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயற்றிறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதற்றமான நிலைமை உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்குச் சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

கால் வலி மற்றும் பல் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை உதவிகரமாக இருக்கும்.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்துக்குப் பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சிறிது கவனமுடன் இருக்கவும்.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதற்றம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயற்றிறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம்சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -23.06.2025




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். உங்கள் பணத்தை நீங்கள் சிறப்பாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும். கால் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதற்றம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்குச் சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயற்றிறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்கள் நம்பிக்கை மற்றும் மன திடம் காரணமாக ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

# மாபியாக்களுக்கு பணிந்து அனல் மின் உற்பத்தியை அரசாங்கம் ஊக்குவிக்கின்றது; எதிர்க்கட்சித் தலைவர்



மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை ஊக்குவிப்பதாகக் கூறிய அரசாங்கம் இன்று மாபியாகருக்கு அடி பணிந்து அனல் மின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தற்போதைய ஜே.வி.பி. அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை ஊக்குவித்து, தற்போதுள்ள எரிபொருள் மாபியாவை மாற்றியமைத்து முறைமையில் மாற்றத்தை கொண்டு வருவோம் என்று உறுதியளித்திருந்தது.

ஆனால் இன்று அந்த முறைமையில் மாற்றம் வார்த்தைகளுக்குள் மட்டுண்டு எரிபொருள் ஆற்றல் மாபியாவை ஊக்குவிக்கும் நிலைக்கு வந்துள்ளது.

கூரைகளின் மீது பொருத்தப்படும் சூரிய மின் தகடுகளுக்கான கட்டணம் ஒரு கிலோவாட் மணிக்கு 37 ரூபாவிலிருந்து 20 ரூபாவாக 45 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது.

இது சூரிய சக்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கை அல்ல. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை நோக்கித் திரும்பும் பலரை அதனை விட்டும் விரட்டியடிக்கும் நடவடிக்கையாக அமைந்துள்ளது.

அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை ஏராளமான சிறிய மட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சூரிய ஆற்றல் தொழில்முனைவோருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

1000 தொழில் நடவடிக்கைகளில் பணிபுரியும் 40 000 க்கும் மேற்பட்ட மக்களை இது மோசமாகப் பாதித்துள்ளது. அவர்களின் தொழில்களும் கேள்விக்குறியாகியுள்ளன.

சூரிய சக்தி நாட்டிற்கு 20 ஆண்டுகளுக்கு நிதி நிலைத்தன்மையை பெற்றுத் தருகிறது. நீண்டகால சேமிப்பையும் கொண்டு வருகிறது. இது சுற்றுச்சூழலுக்கு உகந்த துறையாகவும் காணப்படுகின்றன.

எரிபொருளை பயன்படுத்தும் போது நிதி நிலைத்தன்மையை கொண்டு வராது. சுற்றுச்சூழலுக்கும் இது மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

இயற்கை எரிவாயுவின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது. அனல் மின் நிலையம் மற்றும் எரிபொருள் ஆற்றல்கள் மீது நாடு தங்கியிருக்குமானால் டொலர் செலவையும் எதிர்கொள்ளும். சூரிய சக்தி பயன்பாட்டால் உள்நாட்டு செலவு மட்டுமே காணப்படும்." என்று குறிப்பிட்டுள்ளார்.